பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை 28.10.2022 கதிர் 244

## O/L பரீட்சை பெறுபேறு 25ஆம் திகதி வெளியீடு

இவ்வருடம் நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள், எதிர்வரும் மாதம் 25ஆம் திகதி வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு பூராகவும் கடந்த மே மாதம் சாதாரண தரப் பரீட்சைகள் 3 ஆயிரத்து 844 2




## யாழ். பல்கலை சர்வதேச ஆய்வு மாநாட்டில் முதல் பெண்மணியான ரணிலின் மனைவி




'புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்' என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தால் 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு இன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமான இந்த ஆய்வு மாநாட்டில் இலங்கையின் முதல் பெண்மணியும் களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்க கலந்துகொண்டு முதன்மை உரை ஆற்றினார்.

# ஒருபோதும் அடங்கமாட்டோம்; மக்களுடன் மீண்டெழுவோம்!



## நாமல் எம்.பி. சூளுரை

நாம் எவருக்கும் ஒருபோதும் அடங்க மாட்டோம்; மக்களுடன் இணைந்து மீண்டெழுவோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பதில் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார். 2

## உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலம்!

### இளவாலையில் பரபரப்பு

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தான்குளம் கடற்பரப்பில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இன்று காலை கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான முறையில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்த பொதுமக்கள் இளவாலை 2

## இலங்கை மக்களுக்கு தீங்கிழைக்கவில்லை

### நிம்மதியாகவே உறங்குகின்றேன் என்று மார்தட்டுகின்றார் கப்ரால்



நாடு வங்குரோத்து அடையாமல் இருப்பதற்கு நான் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். மக்களுக்கு எதிராக எவ்வித 8

## கோணேஸ்வர ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம்!

### வலி. மேற்கு பிரதேச சபையில் நிறைவேற்றம்



திருக்கோணேஸ்வரத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அமர்வில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் மேற்கு 2

## தோல்வியடைந்த சரித்திரம் 'மொட்டு'வுக்கு இல்லையாம்

### மஹிந்த தம்பட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குத் தோல்வியடைந்த சரித்திரம் இல்லை.

–இவ்வாறு முன்னாள் 2

## பட்டப்பகலில் வீடு புகுந்து 33 பவுண் நகைகள் திருட்டு

### பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்., பருத்தித்துறையில் வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இந்தத் தகவலை பருத்தித்துறை பொலிஸ் 2

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்கிறது தொல்லியல் திணைக்களத்தின் அடாவடி




### நீதி கோருகிறார் ரவிகரன்

தொல்லியல் திணைக்களத்தினர் தங்களுடைய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை விட பௌத்த மத விகாரையை அமைக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வமாக 8

## விபத்தை ஏற்படுத்திய நபர் தப்பியோட்டம்: மக்களின் உதவியை நாடியுள்ள பொலிஸ்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் விபத்தை ஏற்படுத்தி ஒருவரின் உயிரிழப்புக் காரணமான நபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

அந்த நபரைக் கண்டுபிடிக்கப் பொலிஸார், பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற 2

## அரசின் காணாமல்போனோர் அலுவலகம் ஓர் இனவெறி அமைப்பு என்று கண்டனம்!



அரசின் காணாமல்போனோர் அலுவலகம் என்பது ஓர் இனவெறி அமைப்புஎன்று காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக்கண்டறியும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் 8

## O/L பரீட்சை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய நிலையங்களில் நடை பெற்றன. இந்தப் பரீட்சைகளுக்காக 5 இலட்சத்து 17 ஆயிரத்து 486 பரீட் சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருபோதும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் போராட்டங்கள் மூலம் எமது கட்சியின் அரசியல் பயணத்தைத் தடுத்துவிட முடியாது. எமது எழுச்சிப் பயணம் முன்நோக்கித் தொடரும் என்றும் அவர் சூளுரைத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள் மூலமான அரசிய லையே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. என்பன முன்னெடுத்து வருகின்றன. அக்கட்சியினர் போராட் டங்களைநடத்தினால்அதுஜனநாயகம். நாம் நடத்தினால் அது அடக்குமுறை யாம். அவர்கள் உரையாற்றினால் அது கருத்துச் சுதந்திரமாம். நாங்கள் பேசி னால், எதிரணிகளை இலக்கு வைத்த வேட்டையாம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டங்களை நடத்தினால், அதற்கு எதிராகத் திட்டமிட்ட அடிப்படையில் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. நாவலப்பிட்டியவில் அவ்வாறு நடைபெற்றது.

மஹிந்த ராஜபக்ச கிராமத்திலிருந்து வந்த தலைவர். எனவே, கிராமங்க ளுக்கு வந்து, கிராம மக்களுடன் இணைந்த அவரின் பயணத்தைப் போராட் டங்கள் மூலம் தடுத்து விடமுடியாது.

எமது கட்சி எம்.பிக்களின் வீடுகளை கொளுத்தி, அவர்களை அச்சுறுத்தி எமது பயணத்தைத் தடுத்துவிடலாம் என எவரும் நினைத்துவிடக்கூடாது. எப்படியான சவால்கள் வந்தாலும் ம க்களுடன் இணைந்து முன்னோக்கிப் பயணிப்போம் – என்றார்.

## கோணேஸ்வர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபையின் தவிசாளர் தர்ம லிங்கம் நடனேந்திரனால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தைச் சபையில் சமர்ப்பித்து தவிசாளர் உரையாற்றும்போது,

போர்க் காலத்தில் இருந்து பஞ்ச ஈச்சரங்களில்ஒன்றானதிருக்கோணேஸ் வரத்தில் உள்ள வளங்கள் மிக மோசமா கக் கபளீகரம் செய்யயப்பட்டு வருகின் றது.

திருக்கோணேஸ்வரத்தை எடுத்து நோக்குவோமானால் அதைச் சுற்றி யுள்ள சூழல் மிக மோசமான இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்வாங்கப்பட்டுள் ளது. அங்கே சிவ வழிபாட்டை பயப் பீதி யிலேயே மக்கள் செய்கின்றனர். இது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயம்.

தமிழர் தாயகத்தில் உள்ள பாரம்பரி யங்களைக் கபளீகரம் செய்து தங்க ளுடைய தேவைகளுக்காகத் தொல் பொருள் திணைக்களம் தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றது. இது நிறுத்தப்பட வேண்டும். இது ஒரு நீண்டகாலப் பிரச்சினை. இதற்குத் தீர்வு கிடைக்கும் எனக் கூறுகின்றார்கள். ஆனால், இன் னும் தீர்வு கிடைக்கவில்லை.

உண்மையிலேயே அது சுற்றுலா வுக்கு ஒரு பொருத்தமான இடமும் அல்ல. அங்கு இந்துக்கள் பூஜை வழி பாடுகள் மேற்கொள்ளவேண்டிய தேவை கள் இருக்கின்றன. தற்போது அங்கிருந்த அடையாளங்கள், எச்சங்கள் அனைத் தும் அழிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் ஏன் இந்த நாட்டில் வசிக்கின்றோம் என அனைத்து மக் களும் நினைக்கும் அளவுக்கு இன்றைய இந்தப் பொருளாதார நெருக்கடியும் நில ஆக்கிரமிப்பும் கொண்டுவந்து விட் டுள்ளன. தெய்வத்துக்கே இந்த நிலை என்றால் மக்களுக்கு என்ன நிலை என எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மூலப் பிரதியை ஜனாதிபதி, பிரதமர், தொல்லியல் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் தேவை யேற்படின் இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் அனுப் பிவைப்போம் – என்றார்.

## தோல்வியடைந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியே எவரும் வீழ்த்த முடியாது.

எந்தத் தேர்தல் நடந்தாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியே வெற்றியடையும். தேர்தலில் தோல் வியடைந்த சரித்திரம் எமது கட்சிக்கு இல்லை என்றார்.

## விபத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் விபத்தை ஏற்படுத்திய மோட் டார் சைக்கிள் தப்பிச் சென்றுள்ளது.

படுகாயமடைந்த நபர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்தி அவ்விடத்திலிருந்து மோட்டார் சைக் கிளில்தப்பித்துச்சென்றநபர்தொடர்பில் தகவலை வழங்குமாறு பொதுமக் களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த நபர் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றால் அரு கிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது 0718591343, 0242222226 ஆகிய இலக்கங்களுக்குத் தொடர்பை ஏற் படுத்தி வவுனியா போக்குவரத்துப் பொலி ஸாருக்குத் தகவலை வழங்குமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

## உருக்குலைந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்குத் தகவல் தெரிவித் ததையடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்தனர்.

அதற்கிடையில் சடலம் கடல் அலை மூலம் கரை ஒதுங்கியது.

இதையடுத்து நீதிவான் முன்னி லையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டின் இறுதியிலும் இவ்வாறு சடலங்கள் யாழ். மாவட்ட கடற் கரையோரத்தைச் சூழக் கரையொதுங் கியமை குறிப்பிடத்தக்கது.

## பட்டப் பகலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையப் பொறுப்பதிகாரி ஊடகங் களிடம் இன்று தெரிவித்தார்.

வீட்டில் இருந்தவர்கள் நேற்றுக் காலையில் வேலை நிமித்தம் வெளியே சென்ற வேளை, வீட்டினுள் புகுந்த தி ருடர்கள் அங்கிருந்த 33 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

வீட்டார் மாலை வீடு திரும்பிய போதே பவுண் நகைகள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

அதையடுத்து சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சாத்தியமானதைப் பேசுங்கள்

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தெளிவான திட்டப் பாதையையோ, உருப்படியான செயல் திட்டத்தையோ கொண்டிராத தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி வெறும் வெற்றுக்கோஷங்களிலும் கோட்பாட்டியலிலும் விமர்சனம் செய்தபடி, தனது அரசியலைத் தொடரும் போக்கை கைவிடப் போவதில்லை என்பது தெளிவு.

ஒருபுறம், தமிழ்த் தேசியத்திற்காக குரல் எழுப்பும் மற்றைய தரப்புகள் எல்லாம் வெறும் பித்தளைகள், கோட்பாட்டியல் பற்றி மட்டும் பேசும் தாங்களோ சுத்தத் தங்கங்கள் என்றகருத்தியல் போக்கு.

மறுபுறம், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கான நடைமுறைச் சாத்தியமான செயற்றிட்டமோ, குறைந்தபட்சம் தாயக பூமி கபளீகரம் செய்யப்பட்டு, ஆக்கிரமிக்கப்படும் நாசப் போக்கை எதிர்கொள்ள உடனடி மார்க்கமோ கொண்டிராத அக்கட்சி, ஏனைய எல்லாத் தரப்புக்களின் முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் 'நொட்டை' சொல்வதை மட்டுமே தனது தலையாய செயல்பாடாகக் கொண்டியங்குகின்றது.

இப்போதும் ரணில் தலைமையில் தீர்வு முயற்சிகள் பற்றிப் பேசத் தொடங்கியது தன் கைவரிசையை காட்டத்தொடங்கிவிட்டது. விமர்சனப்பட்டாசுகள்பறக்கின்றன.

அந்த விமர்சனத்திலும் ஒரு குளறுபடி உண்டு.

"நாம் போராடி ஒரு லட்சம் உயிர்களை இழந்தமை இந்த ஒற்றை ஆட்சி வேண்டாம் என்றுதான்"–என இப்போதெல்லாம் பல தடவைகள் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறி வருகிறார்.

இது கூட ஒரு கருத்தியல் திரிப்புத்தான். இப்படிச் செத்த ஒரு லட்சம் பேரில் பெரும் எண்ணிக்கையானோர் தம் உயிரைத் தியாகம் செய்தது 'ஒற்றை ஆட்சிக்கு எதிராக அல்ல'. தமிழீழ கனவுக்காக. தனி நாட்டு இலக்குக்காக.

அதனை 'ஒற்றை ஆட்சிக்கு எதிரான தியாகம்' என்று திரித்து அரசியல் செய்ய வேண்டிய கட்டாயம் இன்று தமிழ்த் தேசிய தரப்புகளுக்கு.

அந்த மக்கள் கேட்ட தமிழீழம் – தனி நாடு – பற்றி இப்போது பேசி அரசியல் பம்மாத்து நடத்த முடியாது என்பதால் 'சமஷ்டி', 'ஒற்றையாட்சிக்கு எதிர்' –என்று கதை விடுகின்றன தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட்ட தரப்புகள்.

'தனித் தமிழீழம்' கேட்டு அரசியல் செய்ய முடியாது என்ற நிலைமைக்காக, தனது அரசியல் கோட்பாட்டுப் போக்கையே நடைமுறைச் சாத்தியமான வழிக்கு ஏற்ப 'ஒற்றை ஆட்சிக்கு எதிரான கோரிக்கை' என கஜேந்திரகுமார் அணியும் சேர்ந்து மாற்ற முடியும் என்றால், அந்த 'ஒற்றை ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டில்' சாத்தியமான பிற வழிமுறைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, பிற தரப்புகளோ ஆராய்வது எப்படித் தவறாகிவிடும்?

கோட்பாடுகளைப் பற்றி பேசுவதில் பிரச்சனை இல்லை. பேசுங்கள். அவற்றை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிவகைகள் – மார்க்கங்கள் – உள்ளனவா, அவற்றை எப்படி, எவ்வளவு காலத்தில் முன்னெடுப்பது? என்பன பற்றி எல்லாம் உருப்படியாகப் பேச வேண்டும்.

உலகில் ஒப்புயர்வற்ற தியாகப் போராட்டம் ஒன்றை தன்னையே உவந்தளித்து முன்னெடுத்துக் களைத்துப் போன ஈழத் தமிழர் சமூகம் இது.

இனியாவது காரிய சாத்தியமான திட்டங்களைப் பற்றிப் பேசுங்கள். கனவுலகில் பேசி, நினைவுலகில் மக்களை நாசமாக்காதீர்கள்!

அரசியல் தலைவர்களுக்கு இது பணிவான வேண்டுகோள்.

# செம்மணி மயானத்தில் மின்னுலை அமைப்பு பொதுமக்களின் பங்களிப்பு கோரப்படுகிறது!

## மயான பரிபாலனசபை தெரிவிப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம் செம்மணி மயானத்தில் மின்னுலை அமைக்க பொதுமக்களின் பங்களிப்பைக் கோர மயான பரிபாலனசபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக செம்மணி மயான பரிபாலனசபையின் தலைவர் லயன் சி. இலட்சுமிகாந்தன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்திக் குறிப்பில், 2010 ஆம் ஆண்டில் செம்மணி மயான பரிபாலன சபையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பொது மக்கள், தொழில்முனைவோர், மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் 60 லட்சம் ரூபா செலவில்மயானம் புனரமைக்கப்பட்டது.

இதுவரை விறகையே எரிபொருளாகக் கொண்டு இந்த மயானம் இயங்கி வருகின்றது.

தற்போது சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும், மரங்களை வெட்டுவதை நிறுத்தும் பொருட்டும், விறகுகளின் நாளாந்த விலையேற்றத்தைக் கணக்கிலெடுத்தும் செம்மணி மயானத்தை மின்மயானமாக மாற்றியமைப்பதற்கு மயான பரிபால சபை தீர்மானித்துள்ளது. இதற்கு பொதுமக்களின் பங்களிப்பை பரிபாலனசபை மீண்டும் கோருகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டின் புனரமைப்பின் போது கொடை வழங்கிய பொதுமக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் தொழில் முனை வோர்களுக்கும் ஓய்வுநிலை உத்தியோகத் தர்களுக்கும் செம்மணி மயான பரிபாலன சபை நன்றியைத் தெரிவித்துள்ளதுடன் புதிய அபிவிருத்தித் திட்டத்தின் பங்குதாரர்க ளாகுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. - என்றுள்ளது.

# நேபாளத்தால் மருந்து வகைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன



நேபாளத்தின் லும்பினி சர்வதேச பௌத்த அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் வணக்கத்துக்குரிய மைத்திரி தேரரால் நன்கொடையாக வழங்கப்பட்ட 10 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான மருந்துப் பொருள்கள் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று (வியாழக் கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவல கத்தில் நடைபெற்றது. சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 2 பலாங்கொடை கிளையின் கோரிக்கையின் பிரகாரம் இந்த மருந்துப் பொருள்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப் பட்டன.

சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர, வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரோ பத்திரகே மற்றும் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 2 முன்னாள் லயன்ஸ் தலைவர் லசந்த குணவர்தன, ஏ.பி ஜகத்சந்திர, டபிள்யூ.கே.என் விஜேசூரிய, சுனில் ஒபேசேகர, சிங்ஹ சமன் குமார ஹெட்டியாரச்சி உள்ளிட்ட அங்கத்தவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# பெண்களை அச்சுறுத்திக் கொள்ளையிடும் சந்தேகநபர் வத்தளையில் வைத்து கைது



முகத்தை முழுமையாக மறைக்கும் முகக் கவசம் அணிந்து வீடுகளுக்குள் நுழைந்து பெண்களை கத்தியைக் காட்டி அச்சுறுத்தி தங்க நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டின் பேரில் வத்தளை சூட்டி கைது செய்யப்பட்டுள்ளார்.

புதன்கிழமை களுத்துறை குற்றப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை, மஹேன பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, வாலான பிரதேசத்தில் வீடு ஒன்றுக்குள் நுழைந்து பெண்ணைக் கத்தியைக் காட்டி மிரட்டி சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றமை தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து கத்தி, 4 கைத் தொலைபேசிகள் , மோட்டார் சைக்கிள், 2 முகக் கவசம் , உள்ளிட்டவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்.

# பிலிப்பைன்ஸில் பயங்கர நில நடுக்கம் பலர் படுகாயம்: கட்டடங்களும் சேதம்!






மணிலா, ஒக்.28

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக அங்குள்ள சர்வதேச விமானநிலையம் உள்பட மிக முக்கியமான கட்டடங்கள் பலவும் சேதமடைந்துள்ளன. பொதுமக்கள் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸ், நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவிதட்டுகள் அடிக்கடி நகருகிற இடத்தில் அமைந்துள்ளமையால், அங்கு எரிமலை வெடிப்பு மற்றும் நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக அந்த நாடு உலகின் பேரழிவு நாடுகளில் ஒன்றாக உள்ளது.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் வடக்கு லுசோன் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள அப்ரா மாகாணத்தின் லகாயன் நகரை மையமாக கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 புள்ளிகளாக பதிவானது. இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 11 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக பிலிப்பைன்ஸ் தேசிய நிலஅதிர்வு ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்தப் பயங்கர நிலநடுக்கம் வடக்கு லுசோன் பிராந்தியத்தியம் முழுவதிலும் கடுமையாக உணரப்பட்டது. சில வினாடிகளுக்கு நீடித்த நிலநடுக்கத்தின்போது வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிலிப்பைன்சின் அதிபர் பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியரின் சொந்த மாகாணமான லோகோஸ் நோர்டேவின் தலைநகர் லாவோக்கில் உள்ள சர்வதேச விமான நிலையம் நிலநடுக்கத்தில் சேதம் அடைந்ததுடன் அந்த விமான நிலையம் நேற்று தற்காலிகமாக மூடப்பட்டது. அதே போல் லோகோஸ் நோர்டே மாகாணத்தின் படாக்நகரில் உள்ள மிகப்பெரிய வைத்தியசாலை ஒன்றின் மேற்கூரை இடிந்துச்விழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், அப்ரா மாகாணத்தில் உள்ள பாஸ் நகரில் நூற்றாண்டு பழமையான தேவாலயம் இடிந்து சேதமடைந்துள்ளது. ககாயன் மாகாணத்தில் நிலநடுக்கத்தால் மின்கம்பிகள் கடும் சேதம் அடைந்ததால் அங்குள்ள பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் உள்பட ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தமையால், அந்த இடிபாடுகளில் சிக்கி 30 பேருக்கும் அதிகமானோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆடி மாதம் பிலிப்பைன்ஸின் வடக்கு பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 7.0 புள்ளி கள் அளவில் பயங்கர நிலநடுக்கம்,ஏற்பட்டது. இதில் 5 பேர் பலியாகியிருந்தனர் என்பதுடன், மிகப்பெரிய அளவில் பொருள் சேதமும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் குளிரால் கொரோனாவின் பாதிப்பு மோசமடையும் என்கிறார் பைடன்




வாஷிங்டன்,ஒக்.28

அமெரிக்காவில் கொரோனாவால் நிகழும் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை யுடன், கொரோனா வைரஸ் தொற்றால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா உள்ளது. உருமாறிய கொரோனாவான ஒமிக்ரான் வைரஸின் தாக்கமும் அங்கு தீவிரமாக உள்ளது.

இந்த நிலையில் ஒமிக்ரான் வைரஸ் தொற்றை எதிர்கொள்ளும் வகையில் புதுப்பிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் செலுத்திக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவர் பேசுகையில் –

இந்த வைரஸ் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. அமெரிக்காவிலும் உலகெங்கிலும் புதிய மாறுபாடுகள் தோன்றியுள்ளன. உங்கள் பழைய தடுப்பூசி அல்லது உங்கள் முந்தைய கொரோனா தொற்று உங்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பை?அளிக்காது. அமெரிக்காவில் போதுமான மக்கள் கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெறவில்லை.

வானிலை குளிர்ச்சியாகி வருகிறது. மக்கள் வீட்டிற்குள் அதிக நேரம் செலவிடுவார்கள்.

எனவே கொரோனா போன்ற தொற்று வைரஸ்கள் கணிச மாக எளிதாக பரவும். நாட்டில் ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 400 பேர் கொரோனாவால் இறக்கின் றனர்.

இந்த குளிர்காலத்தில் அந்த எண்ணிக்கை இன்னும் உயர வாய்ப்புள்ளது என எச்சரித்துள்ளார்.



## எதிர்கால சந்ததி நம்பிக்கையுடன் பயணிக்கும் பிரிட்டனை உருவாக்குவேன் என்கிறார் சுனக்

லண்டன், ஒக்.28

இங்கிலாந்தின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள ரிஷி சுனக்பலண்டனில் உள்ள பிரதமர் இல்லத்தில் தீபவளியை கொண்டாடிய படங்களை டுவிட்டரில் பகிர்ந்து கொண்டமையுடன், அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களையும், தெரிவித்துள்ளார்.

அதன் போது அவர் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்கக்கூடிய பிரிட்டனை உருவாக்க, இந்தப் பொறுப்பில் இருந்துகொண்டு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் மீண்டும் கொரோனா பரவல் ஹன்யாங் மாவட்டத்தில் ஊரடங்கு

ஷாங்காய், ஒக்.28

முதன்முதலாக கொரோனா வைரஸ் கண்டறியப்பட்ட சீனாவின் வூஹான் நகரில் மீண்டும் கொரோனா பரவத் தொடங்கியுள்ள நிலையில் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட 3 ஆண்டுகளாக பூஜ்ஜிய கொவிட் திட்டத்தின் மூலம் பல கட்டுப்பாடுகளை விதித்து கொரோனாவை ஒழிக்க அந்நாட்டு அரசு போராடி வந்தது.

இந்நிலையில், மீண்டும் வூஹானில் கொரோனா அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் சுமார் 9 லட்சம் பேர் வசிக்கும் ஹன்யாங் மாவட்டத்தில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை இந்த ஊரடங்கு தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய கடைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மட்டுமே நடமாடஅனுமதி வழங்கப்பட்டுள்ளது. டடோங், குவான்சு நகரங்களிலும் பொது முடக்கங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# ‘வந்தேபாரத் எக்ஸ்பிரஸ்’ 11ஆம் திகதி ஆரம்பித்து வைக்கிறார் பிரதமர் மோடி



பெங்களூர், ஒக்.28

தென்னிந்தியாவின் முதல் 'வந்தேபாரத் எக்ஸ்பிரஸ்' ரயில் சேவையை பிரதமர் மோடி வருகின்ற 11 ஆம் திகதி பெங்களூரில் தொடங்கி வைப்பார் என முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறியுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் பசவராஜ் பொம்மை பெங்களூரில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:–

பிரதமர் மோடி வருகிற 11ஆம் திகதி பெங்களூர் வருகின்றமையுடன், சர்வதேச விமான நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2 ஆவது முனையத்தைத் திறந்து வைக்கிறார். அதே விழாவில் கெம்பேகவுடாவின் 108 அடி உயர வெண்கல சிலையையும் திறந்து வைக்க இருக்கிறார். அதன் பிறகு பிரமாண்ட பொதுக் கூட்டத்தில் மோடி கலந்து கொண்டு பேசுகிறார்.

மேலும் அன்றைய தினம் பிரதமர் மோடி இந்தியாவின் 5 ஆவது மற்றும் தென்னிந்தியாவின் முதல் அதிவேகமாக செல்லும் சென்னை – மைசூர் இடையே வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் சேவையை பெங்களூரில் தொடங்கிவைக்கிறார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. – என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பறவைக் காய்ச்சல் கேரளாவில் பரவல்!

### உயர்மட்டக் குழு ஆய்வு



புதுடெல்லி, ஒக்.28

கேரளாவில் பறவை காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது எனத் தகவல் வெளியாகியதைத் தொடர்ந்து, மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் 7 பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை கேரளாவுக்கு அனுப்பி வைத்து ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கிறது.

இதுபற்றி மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில், கேரளாவில் பறவை காய்ச்சல் பாதிப்பு பற்றி ஆய்வு செய்ய மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் சார்பில் 7 பேர் கொண்ட உயர்மட்ட குழு ஒன்றை அந்த மாநிலத்திற்கு அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அந்த குழு பறவை காய்ச்சல் பரவல் பற்றி விரிவாக ஆய்வு செய்து, பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையை சமர்ப்பிக்கும். என தெரிவித்துள்ளது.

## புனித் ராஜ்குமாரின் 'கந்தகுடி' ஆவணப்படம் இன்று வெளியீடு



பெங்களூர், ஒக்.28

கன்னட திரை உலகில் முன்னணி நடிகராக விலங்கிய புனித் ராஜ்குமார் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி மாரடைப்பு காரணமாக தனது 46 வயதில் உயிரிழந்தார். அவரது திடீர் மரணம் ரசிகர்கள், திரை உலகினரை அதிர்ச்சியில் ஆழ்த்தி இருந்தது.

புனித் ராஜ்குமார் உயிரிழப்பதற்கு முன்பு 'ஜேம்ஸ்' என்ற திரைப்படத்திலும், தனது கனவு படமான 'கந்தகுடி' என்ற ஆவணப்படத்திலும் நடித்து இருந்தார். 'ஜேம்ஸ்' திரைப்படம் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்று இருந்த நிலையில் புனித் ராஜ்குமாரின் 'கந்தகுடி' ஆவணப்படம் ஒக்டோபர் 28 ஆம் திகதி இன்றுவெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று 'கந்தகுடி' ஆவணப்படம் கர்நாடகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் வெளியாகுகின்றது.

இந்நிலையில், நாளை (சனிக்கிழமை) புனித் ராஜ்குமாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் என்பதால் புனித் ராஜ்குமாருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இன்று நள்ளிரவு 12 மணி முதல் 29 ஆம் திகதி நாளை நள்ளிரவு 12 மணி வரை 24 மணி நேரம் கன்டீரவா ஸ்டூடியோவில் இசை அஞ்சலி செலுத்தப்படும் என்று நடிகர் சாது கோகிலா கூறியுள்ளார்.

## இம்ரான்கான் சுயசரிதைப் புத்தகத்தை இந்தியாவில் வெளியிட பொலிஸ் தடை



பெங்களூர், ஒக்.28

பெங்களூரைச் சேர்ந்த எழுத்தாளர் சுதாகர் என்பவர் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வாழ்க்கையை பற்றி சுயசரிதை புத்தகம் எழுதி இருந்த நிலையில், அந்த புத்தகத்தின் வெளியீடு நிகழ்ச்சி பெங்களூர் ஞானபாரதி மல்லடஹள்ளி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற இருந்தது.

இதுபற்றி அறிந்ததும் இந்து அமைப்பினர் ஞானபாரதி பொலிஸ் நிலையத்தில் ஒருவ்புகார் அளித்தனர். அந்த புகாரில் புல்வா மாவில் தாக்குதலுக்கு காரணமான பாகிஸ் தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் வாழ்க்கை பற்றிய சுயசரிதை புத்தகத்தை வெளி யிட உள்ளனர். இந்த நிகழ்ச்சிக்கு அனுமதி வழங் கஜ் கூடாது என்று கூறி இருந்தனர்.

மேலும் அந்த நிகழ்ச்சிக்கு எதிராக இந்து அமைப்பினர் போராட்டமும் நடத்தியிருந்தனர். இதனால் புத்தக வெளியீடு நிகழ்ச்சிக்கு வழங்கிய அனுமதியை பொலிஸார் ரத்துச் செய்தனர்.

## லொறி தடம்புரண்டு தீவிபத்து;ஒருவர் பலி, ஒருவர் காயம்; மூன்று பஸ்களும் தீக்கிரை



ராஞ்சி, ஒக்.28

ஜார்கண்ட் மாநிலம், தும்கா மாவட்டத்தில் ஹன்சிதா நகரை நோக்கி நேற்று ஹாஸ் எரிபொருள் லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த எரிபொருள் லொறி அங்குள்ள தவதந்த் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டைவ் இழந்து கவிழ்ந்து, வெடித்துத் தீப் பிடித்தது. அப்போது அந்தப் பகுதியில் ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தப்பட்டிருந்த 3 பஸ்களுக்கும் தீ வேகமா கப் பரவி அவை எரியத்தொடங்கின. அந்தப் பகுதியில் உள்ள மரங்களும் இந்தத் தீயில் எரிந்துள்ளன.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்தில் ஒருவர் உடல் கருகி பலியானார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார். அவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# திருமலை முதியோர் இல்லத்திற்கு ‘காப்போம்’ நிறுவனம் அன்பளிப்பு







(பைசல் இஸ்மாயில், மட்டு. துாரா)

திருகோணமலை – அலஸ்தோட்ட செயின்ட் யோசப் முதியோர் இல்லத்திலுள்ளவர்களுக்கு புதிய ஆடைகள் இலங்கை ‘காப்போம்’ தொண்டு நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டன. செயின்ட் யோசப் முதியோர் இல்லத்தின் பொறுப்பதிகாரி அருட் சகோதரி லூசினா தலைமையில் நேற்று முன்தினம் முதியோர் இல்ல கூட்ட மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி ஜே.ஜே.முரளி தரன் மற்றும் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள மக்களுக்கு இனமத, மொழி பாகுபாடின்றி தனது உதவிகளை மனிதாபிமான ரீதியில் இந்நிறுவனம் வழங்கி வருகின்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கான நிதி லண்டனைச் சேர்ந்த பத்மா குணதாசனினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முதியவர்களை மகிழ்விப்பதற்காக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மூதூரில் மகளிருக்காக

# மனஅழுத்த முகாமைத்துவ விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(ஹஸ்பர்)

திருகோணமலை,மூதூரிலுள்ள 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள பெண்கள் குழுக்களின் பொறுப்பாளர்களிற்கான ’மன அழுத்தத்தை முகாமை செய்தல்’ தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு மூதூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப்பிரிவிற்கு பொறுப்பான வைத்தியர் ஏ.கே.எம். நஸ்மி வளவாளராகக் கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்.

இதன் போது உளநலத்தின் முக்கியத்துவம், போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வை சமூக வளர்ச்சி மற்றும் அமைதிக்கான மையம் ஒழுங்குசெய்திருந்தது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள்










(பைசல் இஸ்மாயில்)

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவில் கிழக்கு ாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப்பெற்றன.

வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இவ்விழா, கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி நிலைய கூட்ட மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரச நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டன.

கடந்த 2020 ஆம் ஆண்டு வட கிழக்கு மாகாணங் களிலுள்ள அரச நிறுவனங்களில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறனில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கல் நிகழ்வு கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டு நேற்றையதினம் இடம்பெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப் பெற்றன. மட்டக்களப்பு – புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலைக்கு விசேட திறமைச் சான்றிதழுடன் விருதும், மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு திறமைச் சான்றிதழும் கிடைக்கப்பெற்றன.

இவ்விருதுகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் மற்றும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி ஜே.பாஸ்கரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# சாய்ந்தமருது பிரதேசத்தில் முதியவர்களுக்கு உதவிகள்

(நூறுல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது கிராம உத்தியோத்தர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு பெறுகின்ற – தெரிவு செய்யப்பட்ட – குடும்பங்களில் வயது முதிர்ந்து இயலாமை நிலையில் உள்ள முதியவர்களுக்கு கட்டில்களும், விசேட தேவையுடைவர்களுக்கான சக்கர நாற்காலியும், வீட்டை. முழுமையாகப் பூர்த்தி செய்யாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ள குடும்பத்துக்கு சீமெந்து பக்கெட்களும் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று நேற்று முன்தினன் வழங்கி வைக்கப்பட்டன.





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், அதிதிகளாக பிரதேச செயலக சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். றிபாயா, சமுர்த்தி முகாமைத் துவ பணிப்பாளர் ஏ.எல்.யு.ஜுனைதா, சமுர்த்தி மகா சங்க உதவி முகாமையாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பிரதேச அமைப்பின் தலைவர், செயலாளர் என பலரும் கலந்துகொண்டனர்.

இவ்வேலைத்திட்டத்திற்கான நிதியை சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்ட பண்பாட்டு விழா!









வவுனியா மாவட்ட பண்பாட்டு பெருவிழா கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

இயல், இசை, நாடகம் என பல்சுவை நிகழ்வுகளுடன் தமிழ் சிங்கள மற்றும் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றிருந்தன.

இதேவேளை, வவுனியாவில் கலை வளர்ச்சிக்காக செயற்பட்ட கலைஞர்கள் வவுனியம் விருதும் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர்.

# 33 நாள்களாகியும் கரை திரும்பாத நான்கு வாழைச்சேனை மீனவர்கள்!

## தேடும் நடவடிக்கைகள் மந்த கதியில் என விசனம்









(எச்.எம்.எம்.பர்ஸான்)

மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற வாழைச்சேனை பகுதியைச்சேர்ந்த நான்கு மீனவர்கள் 33 நாள்களாகியும் இதுவரை வீடு திரும்பவில்லை என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற தந்தை, மகன், உறவினர் ஒருவர் உட்பட நான்கு மீனவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என மீனவர்களின் உறவினர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏழு நாட்கள் பயணம் செய்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும் 33 நாள்கள் வீடு திரும்பவில்லை என்று காணமல் போயுள்ள மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர்.

இதில், வாழைச்சேனை கோழிக்கடை வீதியைச் சேர்ந்த உமர்தீன் அசன் அலி (62 வயது), அவரது மகன் அசன் அலி முகாஜித் (34 வயது) மற்றும் அவர்களது உறவினரான பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்த பீ.எம்.இர்ாத் (32 வயது) அவர்களோடு வாழைச்சேனை ஹைராத் வீதியைச் சேர்ந்த எம்.எச்.எம்.றிஸ்வி (34 வயது) ஆகிய மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

35 அடி நீளமான இயந்திரப் படகில் சென்ற நான்கு மீனவர்களும் ஒரு வாரத்துக்கான உணவுகளை மாத்திரமே கொண்டு சென்றுள்ளனர் எனவும், மீனவர்களை தேடும் நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், மீனவர்களை கண்டுபிடிப்பதற்காக வேண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாம் முறைப்பாடு செய்யவுள்ளனர் எனவும் மீனவர்களின் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு காணமால் போயுள்ள எமது உறவுகளை கண்டுபிடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உறவினர்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

# மன்னாரில் கடலெண்ணை கசிவு குறித்த விசேட விழிப்புணர்வுக் கலந்துரையாடல்!

கடலோர மாவட்டங்களில் ஏற்படக்கூடிய எண்ணைக்கசிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் உலக உணவு திட்டத்தின் அனுசரணையில் நேற்று (வியாழக்கிழமை) மன்னாரில் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் நாடளாவிய ரீதியில் காணப்படும் எண்ணெய்க்கசிவு தொடர்பான ஆபத்துக்கள் தொடர்பாகவும் அதே நேரம் எண்ணெய்க் கசிவு ஆபத்து ஏற்படும் போது சூழல் ரீதியாகவும், கடல் சார்ந்து ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதற்கமைய இந்தச் செயற்திட்டம் 14 மாவட்டங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கடற்படையினர், விமானப்படையினர், உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலையில் சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு முயற்சி







சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் அத்துறையுடன் தொடர்புடைய செயலமர்வொன்று திருகோணமலை ஸ்வர்க்கா விடுதியில் நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம் மற்றும் ஆஸ்திரேலிய உதவித்திட்டத்தின் கீழாக உள்ள வளர்ச்சிக்கான திறன்கள் அமைப்பினால் இது முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் பொது முகாமையாளர் டாக்டர் ஞானசேகரன், சமூக சுற்றுலாத்துறை உருப்பினர்கள், விடுதி உரிமையாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விடுதி உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்கள் பங்கேற் றிருந்தனர்.

இதன் போது கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையானது கடந்த 2020 ஆம் ஆண்டிலிருந்து பின்னடைவை சந்தித்திருந்த போதிலும் அண்மைக்காலத்தில் அதனை கட்டியெழுப்புவதற்கு உவப்பான காலநிலை நிலவி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மேலும் நாடு சந்தித்துள்ள பின்னடைவிலிருந்து அதனை மீட்டெடுப்பதற்கு நாட்டுக்கு டொலர் அவசியம், அதனை அடைவதற்கு சுற்றுலாத்துறையானது முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

அதனையே அரசாங் கமும் ஒரு முக்கிய விடயமாக கருத்தில்கொண்டு செயற் பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## அரசின் காணாமல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமா ரால் இன்று வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையிலே தெரிவிக் கப்பட்டுள்ளது .அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, வவுனியாவில் 2075 நாட்களை கடந்தும் தொடர் கவன யீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்டறியும் தமிழர் தாயக சங்கத்தி னரால், அரசின் காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் அதன் பொறி முறையைக் எதிர்த்து - கண்டனம் தெரிவித்து காணாமல்போனோர் அலுவலகத்தால் தாய்மாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதங் களும் போராட்டப் பந்தலில் நேற்று தீ வைத்து எரிக்கப்பட்டன.

அரசின் காணாமல்போனோர் அலு வலகம் என்பது ஓர் இனவெறி அமைப்பு. காணாமல்போனோர் அலு வலகம், தொல்பொருள், வனவள திணைக்களம் அனைத்தும் ஒன்று தான்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் பிள்ளைகளைக் கண்டறியவும், எதி ர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2078ஆவது நாள் இன்று.

இனப்படுகொலை எதுவும் நடக்க வில்லை என்றும், சரணடைந்த தமிழர் கள்அனைவரும்காணாமல்ஆக்கப்பட வில்லை என்றும் அரசின் காணாமல் போனோர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

முதலில் மன்னாரில் அரசின் காணாமல்போனோர் அலுவலகம் உருவானபோது நாங்கள் நிராகரித்து ஆர்ப்பாட்டம் செய்தோம். நிமல்கா பெர்னாண்டோ இதனை உருவாக் குவதற்குத் தலைமை தாங்கினார்.

சிங்கள அரச சார்பற்ற நிறுவனங் களுக்கு நிதியுதவி வழங்குவதற்காகவே காணாமல்போனோர் அலுவலகம் உருவாக்கப்பட்டது.

சுமந்திரன் அரசின் காணாமல் போனோர் அலுவலகத்துக்கு மிகவும் ஆதரவாக இருந்தார். அரசின் காணாமல்போனோர் அலுவலகத்தை உருவாக்குவதற்காக ஜெனிவாவில் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசார ணையை அவர் கைவிட்டார் என்பதை நாம் தமிழர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

இந்தச் சுமந்திரனைத் தமிழ் அரசி யலில் இருந்து தூக்கி வீச வேண்டும். அவரை மீண்டும் கொழும்புக்கு அனுப்ப வேண்டும்.

பல தமிழர்களைக் கடத்திச் சென் றும், குண்டுகள் போட்டும், தமிழரைக் கொன்றதும் இலங்கை இராணுவம் தான் என்று 2011 ஐநா குழு அறிக்கை கூறுகின்றது.

2011இல், ஐ.நா. குழு நம்பகமான குற்றச்சாட்டுகளைக் கண்டறிந்தது, அது நிரூபிக்கப்பட்டால், போர்க்குற் றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் இலங்கை இராணு வத்தால் இழைக்கப்பட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

அரசின் காணாமல்போனோர் அலுவலகம் என்பது தொல்பொருள், வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி போன்ற பிற அரசுத் துறைகளுடன்இணைந்துதமிழர்களை ஒடுக்குவதற்கான மற்றொரு சிங்கள ஸ்ரீலங்காவின் கருவியாகும்.

இந்தப்பொருளாதாரநெருக்கடியின் கீழ், ஸ்ரீலங்கா இன்னும் அதன் அடக்குமுறையைத் தொடர்கின்றது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற பணக்கார நாடுகள் ஸ்ரீலங்காவுக்குப் பணம் கொடுத்து அவர்களின் கஷ்டத்தைத்தீர்த்தால்அது அவர்களின் இன அழிப்புக்கு ஒட்சிசன் கொடுப் பதாகும்.

அரசின் காணாமல்போனோர் அலுவலகத்தின் அறிக்கையைநாங்கள் நிராகரிக்கிறோம். இலங்கையில் நீதி ம ற்றும் பொறுப்புக்கூறல் பற்றி பேசுவது பயனற்றது மற்றும் நேரத்தை வீண டிப்பது என்று அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தமிழர்களுக்கு உதவக்கூடிய ஒரே நாடு அமெரிக்கா என்று நாங்கள் இன் னும் உறுதியாக நம்புகின்றோம் -என்றுள்ளது

## முல்லைத்தீவு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருக்கின்றார்கள் என்று முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந் தூர்மலை விடயத்தைப் பொறுத்த வரையில் தொடர்ச்சியாகப் பூர்வீக ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தை அபகரிக் கும்நோக்கோடுஅல்லதுபௌத்தத்தைத் திணிக்கும் நோக்கோடு பலருடைய செயற்பாடும் காணப்படுகின்றது.

தொல்லியல்திணைக்களம்தங்களு டைய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை விட பௌத்த மத விகாரையை அமைக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வமாக இருப்பதாகத் தெரிகின்றது. அதனைவிட பிக்குகள் அதிகமாகவந்துதங்களுடைய மதத்தைத் திணிக்கும் நோக்கமாகவே காணப்படுகின்றது.

அதனைவிட முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் புறம் தள்ளி பௌத்த மத திணிப்புக்கு ஆதரவாகச் செயற்படும் நிலைதான் காணப்படுகின்றது. சைவ மத வழி பாடுகளை முற்றுமுழுதாகப் புறக் கணிக்கும் நோக்கத்தோடு அவர்கள் செயற்படுகின்றார்கள்.

நேற்று (27) எங்களால் நகர்த்தல் பத்திரம் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குத் தவணையி டப்பட்டுள்ளது.

நான்கு வழக்குகள் குருந்தூர்ம லைக்காகஎங்கள்மீதுபோடப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

இதனைவிட குருந்தூர்மலை விடயம் தொடர்பாக இரண்டு அமைச்சர்கள் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நேரடி விஜயம் செய்யவுள்ளார் எனவும், இரு பகுதியினரையும் அழைத்து அது தொடர்பான விளக்கங்களையும் கோரவுள்ளார் எனவும் ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது.

இதிலே ஒரு விடயத்தைக் கூறு கின்றேன். தண்ணிமுறிப்பு - குருந்தூர் மலை பகுதியானது கிட்டத்தட்ட 13 கிராம மக்களுக்கு ஏற்கனவே அந்த நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தண்ணி முறிப்பு, குமுழமுனை கிராமங்கள் மட் டுமல்ல வட்டுவாகல் வரையும் அந்த நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. இந்த மக்களுக்குக் காணிகள் மட் டுமல்ல குருந்தூர்மலை, ஆதிசிவன் ஐய னார் ஆலயம் இவ்வாறு பூர்வீக சொத் துக்கள் அம் மக்களின் சொத்துக்கள்.

இன்று ஆதிசிவன் ஐயனார் ஆலயம் இருந்த இடத்தை முற்றுமுழுதாக அழித்து தொல்லியல் ஆய்வுக்கென வந்தவர்கள் ஆய்வுகளைப் பார்க்கி றார்களோ, இல்லையோ, ஆனால் பௌத்த மத விகாரையை அமைக்கும் பணியை வேகமாகச் செய்கின்றார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பானது கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படவேண்டும்; அதற்கு மேல் ஒன்றும் கட்டக்கூடாது என்று வழங்கப்பட்ட நிலையில் கூட இதனை அத்துமீறிய செயற்பாடாகவே இருக் கின்றது. இதனைப் பார்த்துக்கொண்டி ருக்கின்ற பொலிஸார் இதற்கு ஒத்துச் செல்பவர்களாகவும், ஆதரவு வழங்கு பவர்களாகவுமே காணப்படுகின்றார்கள்.

இங்கே வர இருக்கும் அமைச்சர்கள் சரியான முறையிலே ஆய்வுகள், அறிக்கைகள், ஏற்கனவே உள்ள எங்களது வழிபாட்டுத் தலங்கள் என்ப வற்றைச் சரியான முறையில் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக் கையை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அரசினுடைய அமை ச்சர்களாக வரு பவர்கள் பிழையான விடயங்களில் ஈடுபடக்கூடாது என்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

எங்களுடைய பூர்வீகம், கோரிக்கை நியாயமானது. சரியான முறையில் ஆய்வுகளை மேற்கொள்வார்களாக இருந்தால் எங்களுக்குச் சாதகமாகவே அமையும் - என்றார்.

## இலங்கை மக்களு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையையும் செய்தது கிடையாது.

- இவ்வாறு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கடும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் பரிதவிக்கின்றனர். இப்படியானதொரு நிலைமை ஏற்பட நீங்களும் காரணம் எனக் கூறப்படுகின்றது. மக்கள் தவிக் கையில் உங்களால் நிம்மதியாக நித்தி ரை கொள்ள முடிகின்றதா என எழுப்பப் பட்டகேள்விக்குப்பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் கப்ரால் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நிம்மதியாகவே உறங்கு கின்றேன். ஏனெனில் மக்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை.

நாடு வங்குரோத்து அடையாமல் இருப்பதற்கு நானே நடவடிக்கை மேற் கொண்டிருந்தேன். எனது மனச்சாட்சி தூய்மையானது, ஆக எந்தவொரு குற்ற உணர்வும் இல்லை.

தனிநபர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம். வழக்குகளை தொடுக்கலாம். அவ்வாறான வழக்கு களையே எதிர்கொண்டு வருகின்றேன். தனிநபர் என்பது ஒட்டுமொத்த ம க்களைப் பிரதிபலிக்காது. மக்கள் என் தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிடுவதில்லை - என்றார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




